**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் - 1 விழுப்புரம்**

**O.S No.1214/2024**

**Witness PW 1**

**பெயர்: மாரிமுத்து**

**த/பெ.:**

**இன்று (13.02.2025) சாட்சி சத்தியபிரமாணம் எசெய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் நன்றாக எழுத படிக்க தெரியுமா என்றால் ஓர் அளவிற்கு தெரியும். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். எனக்கு 6 ஏக்கர் விவசாய நிலம் அய்யன்கோவில் பட்டு என்ற ஊரில் உள்ளது. நான் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. நான் சுந்தரம் என்பவரிடம் அவரது நிலத்தை கிரையம் வாங்குவதற்காக ரூ.3 லட்சத்தை கொடுத்து கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன். அதில் குறிப்பிட்டுள்ளவாறு ரூ.25,000 நிலுவையில் வைத்து கொடுத்தேன். விழுப்புரத்தில் உள்ள காமராஜர் தெருவில் விமலா ஜிவல்லரி என்ற நகை கடையை நான் நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. எனது மகன் தான் நடத்தி வருகிறார். நான் அந்த கடைக்கு எப்பொழுதும் செல்வேன் என்றால் இல்லை. எப்பொழுதாவது தான் செல்வேன். ரூ.3 லட்சம் ரூபாய் பணத்தை நகை கடையில் வைத்து கொடுத்தேனா என்றால் இல்லை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். எனக்கு எத்தனை வங்கி கணக்கு உள்ளது என்றால் கரூர் வைசியா வங்கியில் ஒரே ஒரு கணக்கு தான் உள்ளது. நான் 3 லட்சம் ரூபாயை எனது வங்கி கணக்கில் இருந்து எடுத்து கொடுத்தற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வீட்டில் வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். பிரதிவாதி என்னிடம் கடனாக தான் பணத்தை கேட்டார் என்றாலும் கடனுக்காக பிரதிவாதிக்கு தெரியாமல் கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் இல்லை. கடனுக்காகத்தான் கிரைய அசல் ஆவணத்தை என்னிடம் பிரதிவாதி ஒப்படைத்தார் என்று சொன்னால் இல்லை. 21.11.2020ம்தேதி பிரதிவாதி ரூ.75000க்கு கிரையம் வாங்கியதாக

எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் சந்தை மதிப்பு ரூ.1 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. 284/12 மற்றும் 13 என்ற சர்வே எண்ணில் மனை எண்.13ஐ அதன் விஸ்தீரணம் 4 1/2 செண்ட் என்று காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தில் காலி மனை என்று கூறி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரி. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு வில்லங்கம் பெற்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த தேதியில் வில்லங்கம் வாங்கினேன் என்றால் 26ம் தேதி வாங்கி பார்த்தேன். அந்த வில்லங்க ஆவணத்தை நீதிமன்றத்தில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையில் பிரதிவாதி அவரது சொத்தினை விற்பனை செய்ய வேண்டும் என்று கூறியிருந்தால் அதற்கான வில்லங்க சான்றினை பெற்று பார்த்து அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் வில்லங்கம் பெற்று பார்த்தேன் . அதனை எனது வீட்டில் இருந்து தேடி எடுத்து வருகிறேன். வா.சா.ஆ.2ல் சொத்து மதிப்பு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு வா.சா.ஆ.2ல் மனைக்கான மதிப்பு வீட்டிற்கான மதிப்பு என சொத்து மதிப்பு குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவணம் ஏற்பட்ட தேதியில் சொத்திற்கு வழிகாட்டி அரசு மதிப்பீடு எவ்வளவு என்று நான் பார்த்தேனா என்றால் இல்லை. ஊரில் மதிப்பை வைத்து தான் கிரைய ஒப்பந்தம் போட்டோம். கிரையம் செய்ய வேண்டும் என்றால் கிரைய வழிகாட்டு மதிப்பினை பெற்று பார்த்திருப்பேன் என்றாலும் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின் சர்வீஸ் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் பிரதவாதியின் பெயரில் இருப்பதாக கூறினார். மின் இணைப்பு பிரதிவாதியின் பெயரில் இல்லை என்றால் பக்கத்து வீட்டுக்காரரின் மின் இணைப்பு எண் என்று சொன்னாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 உண்மையாக கிரையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 6 ஏக்கர் நிலத்தில் இருந்து வருடத்திற்கு 250 மூட்டை நெல் வருகிறது. அதில் இருந்து எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்று சொன்னால் ஒரு மூட்டைக்கு 1000 ரூபாய் வீதம் வரும். அவ்வாறு எனில் வருடத்திற்கு ரூ.2,50,000 வரும் என்று சொன்னால் சரி. வா.சா.ஆ.2ல் ரூ.25,000க்காக 3 வருடம் கால கெடு போட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. சென்னைக்கு போவதாக பிரதிவாதி கூறினார். எனக்கு

ரூ.25,000ஐ கொடுத்து உடனடியாக கிரையம் செய்திருக்கக்கூடிய வசதி உள்ளது என்றாலும் நான் ரூ.25,000க்காக கிரையத்தை நிறுத்தி வைத்திருந்தேன் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் பணம் இல்லை.நான் வழக்கு சொத்தில் உள்ள வீட்டினை சென்று பார்த்தேன். அந்த வீட்டின் புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வீட்டின் மதிப்பு எவ்வளவு என கட்டிட பொறியாளரை வைத்து கணக்கிட்டு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சதுர அடி எவ்வளவு எனறு தெரிந்துகொண்டேனா என்றால் சதுர அடியாக பேசவில்லை. செண்ட் கணக்கில் தான் பேசினோம். நிலம் என்றால் அதனை செண்ட் கணக்கில் விலை பேசுவார்கள் என்றாலும் மனை என்றால் சதுர அடியில் தான் விலை பேசுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. நகரத்தில் தான் சதுர அடியில் பேசுவார்கள். அரசாங்கத்தில் வழக்கு சொத்தானது செண்ட் கணக்கில் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதா அல்லது சதுர அடி கணக்கில் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதா என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் பத்திரத்தில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டது. தாய் பத்திரத்தில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டது. வழக்கு சொத்திற்கு சதுர அடியில் அரசாங்கம் விலை நிர்ணயம் செய்து வைத்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் பேசும் போது செண்ட் கணக்கில் தான் பேசினோம். வீட்டின் மதிப்பு 10 லட்சம் ரூபாய் இருக்கும் என்று சொன்னால் இல்லை. 5 லட்சம் ரூபாய் இருக்குமா என்றால் இல்லை. அவ்வளவு ரூபாய் இருக்காது. சதுரடியில் மனையின் சந்தை மதிப்பு ஆனது ரூ.1,39,231/- என்று சொன்னால் நான் மார்க்கெட் மதிப்பில் வாங்கவில்லை. மொத்தமாகத்தான் வாங்கினேன். வீடடின் மதிப்பு 5 லட்சம் ரூபாய் இருக்கும் என்றாலும் அதனால் தோராயமாக வீட்டின் மதிப்பு 6 லட்சம் இருக்கும் என்று சொன்னால் இல்லை. மின் இணைப்பானது கெங்கமுத்து என்பவர் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் இல்லை. உண்மையாக கிரையம் வாங்குவதாக இருந்தால் வீட்டிற்கான மதிப்பு மற்றும் மின் இணைப்பு எண் யார் பெயரில் உள்ளது என்பதை தெரிந்து தான் எழுதியிருப்பேன் என்றால் கடனுக்காக பணம் வாங்கியதால் தான் அவ்வாறு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் நகை கடை நடத்தி வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் தான் நகை கடை மற்றும் நகை அடைமான கடை வைத்து நடத்தி வருகிறேன் என்று சொன்னால் இல்லை. அந்த

கடையில் இருந்து தான் நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் பிரதிவாதி 1.5 லட்சம் ரூபாய் தான் கடன் கேட்டார் என்றாலும் நான் அதனை 2 மடங்காக சொல்லி கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. பிரதிவாதி எதற்காக சென்னையில் இருந்து வருகிறார் என்றால் வேலைக்கு போவதாக கூறினார். என்ன வேலை என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள சொத்தில் பிரதிவாதி குடும்பம் நடத்தி வருகிறாரா என்றால் நடத்தி வருகிறார். பிரதிவாதிக்கு வழக்கு சொத்து மட்டும் தான் உரிமையாக உள்ளது என்றாலும் வேறு எந்த இடமும் உரிமை இல்லை என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி ஏழை என்றாலும் கஉஷ்டபட்டு சென்னையில் கூலி வேலை செய்து வழக்கு சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் நானும் தான் கஉஷ்டபட்டு வேலை செய்து சம்பாதித்து வருகிறேன். நான் உண்மையெல்லாம் மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**x**

**Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.**

**(Sd/--M.S. Varalakhmi)**
**I Additional Subordinate Judge,**
**Villupuram**